31.08.2023
O.S.No. 112/2018

பி. வா. சா. 2 கார்த்திகேயன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை (தொடர்ச்சி) :-

2.2.2013 தேதியில் பதிவுத்துறை தலைவர் அனுப்பிய சுற்றறிக்கையில் அதிகார ஆவணத்தில் அடிப்படையில் ஆவணங்கள் பதிவு செய்ய தாக்கல் செய்யும் போது Life certificate தாக்கல் செய்யவேண்டும் என்றும் அவ்வாறு தாக்கல் செய்தால்தான் ஆவணங்கள் பதிவு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதசாஆ.9 என் பேரில் உள்ள 6.5.2013 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தில் அதிகாரம் கொடுத்த உரிமையாளரின் Life Certificate இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.9 ஏற்பட்ட தேதியில் என்னிடம் ரூ.5 லட்சம் ரொக்கம் இருந்தது என்பதை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.9 ஆவணத்தை 13.8.2014 தேதியன்று ரத்து செய்து பிறப்பித்த ஆவணம்தான் வாதசாஆ.18 என்றால் சரிதான். வாதசாஆ.18 ரத்து ஆவணத்தில் ரூ.5 லட்சம் திருப்பிக்கொடுக்கப்பட்டதாக வாசகம் இல்லை என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக வில்லங்கம் இருப்பதால் பத்திரம் ரத்து செய்யப்பட்டது. அந்த விவரம் ரத்து பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். இரத்து பத்திரம் எழுதுவதற்கு பத்திர எழுத்தரிடம் யார் விவரம் சொன்னது என்றால் 1 ம் பிரதிவாதி சதீஷ்குமாரிடம் சொல்லி அவர் வாதி கணேசனிடம் சொன்னார். மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.18 இரத்து ஆவணத்தில் மேற்படி கிரைய அக்ரிமெண்டில் கண்ட சரத்துப்படி நம்மில் 2 வது நபராகிய (நான்) மீதி கிரைய தொகையை நம்மில் 1 வது நபருக்கு (1 ம் பிரதிவாதி சதீஷ்குமார்) செலுத்தி வைத்து கிரையம் செய்ய இயலாத நிலையில் இருப்பதாலும்,

நம்மில் 1 வது கிரைய செய்ய விரும்பாததாலும், மேற்படி கிரைய அக்ரிமெண்ட் ஊர்ஜிதத்தில் இருப்பதை நாம் இருவரும் விரும்பாததாலும், வாதசாஆ.9 கிரைய ஒப்பந்தத்தை இரத்து செய்வதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். நான் நடந்த விவரம் சதீஷ்குமாரிடம் சொல்லி பத்திர எழுத்தர் எழுதினார். நான் ரத்து பத்திரம் என்பதும் கையெழுத்து போட்டு விட்டேன். இரத்துப்பத்திரத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சதீஷ்குமாரிடம் சொல்லி பத்திரம் தயார் செய்யப்பட்ட விவரத்தை எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இரத்து எழுதப்பட்ட தேதியில் என்னிடம் பணம் இருந்தது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் ரத்தான அதே தேதியில் வாதசாஆ.10 கிரைய பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் வெளியூரில் இருப்பதால் அடிக்கடி வரமுடியாத காரணத்தினால் அன்றைய தினமே கிரைய பத்திரம் பதிவு செய்தோம். மேற்படி விவரத்தை எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.9 போலியான ஆவணம் என்பதால்தான் வாதசாஆ.18 இரத்து ஆவணத்தில் ரூ.5 லட்சம் திருப்பிக் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வாதசாஆ.18 ஆவணம் ஏற்பட்ட தேதியன்று என்னிடம் எந்த பணமும் ரொக்கமாக இல்லை என்றும் வாதசாஆ.10 கிரைய பத்திரம் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.50000 க்கும் மேல் ரொக்கம் கொடுத்து பத்திரம் பதிவு செய்யவேண்டும் என்றால் வங்கி வரைவு காசோலை அல்லது காசோலை மூலமாக தொகை செலுத்தவேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியாது. வாதசாஆ.10 கிரைய ஆவணத்திரம் வங்கி வரைவு காசோலை அல்லது காசோலை மூலமாக தொகை செலுத்தியதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.10 கிரைய பத்திரம் ஏற்பட்ட தேதியில் ரொக்கமாக

என் கைவசம் பணம் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.10 ஆவணத்துடன் Life certificate இணைக்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு சொத்து வாங்குவதற்கு பணம் அதிகமாக தேவைப்படும் சூழ்நிலையில் பணம் கொடுப்பதற்கு ஆதாரமாக பொறுப்புக்காக அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கவேண்டும் என்று கரூர் பைனான்ஸ் கேட்டுக்கொண்டதன்படி கரூர் பைனான்ஸ்ன் முகவராக இருந்த பார்த்தசாரதி இந்த அதிகார ஆவணத்தை தயார் செய்து வாதியிடம் கையெழுத்து வாங்கினார் என்றும், இந்த அதிகார ஆவணத்தை வைத்து சொத்தை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தவோ, கிரைய ஏற்படுத்தவோ வாதிக்கும் கரூர் பைனான்ஸ்க்கும் இடையே எந்தவித ஆவணமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 2 ம் பிரதிவாதி மற்றும் 4 ம் பிரதிவாதி ஒருதலைப்பட்சமாக்கப்-பட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி யார் என தெரியாது. நான் பத்திரம் பதியும்போது அவரும் பதிந்தார். 1 முதல் 4 பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்துதான் போலியாக ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிவாசாஆ.2 ஒப்புகை கடிதம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சதீஷ்குமார் மூலமாக தெரியும். ஒப்புகை கடிதத்தை சதீஷ்குமார் என்னிடம் காட்டியுள்ளார். அதில் ரெவின்யு ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்து போடப்பட்டுள்ளதா என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. பிவாசாஆ.2 ல் ரெவின்யு ஸ்டாம்ப் ஒட்டப்படவில்லை என்றாலும் தொகை குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். பவர் பத்திரம் எழுதி வாங்கும்போது எழுதப்படாத கான்கர் பேப்பரிலும், கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. வாதசாஆ.12 ஆவணத்தின்படி வாதியிடம் இருந்து என்ன என்ன ஆவணங்கள் பெறப்பட்டது என்பது தெரியவருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கரூர் ஆட்டோ பைனான்சின் ஒரு பங்குதாரர் என்றும் எனவே ஆவணங்கள் அனைத்தும் போலியாக தயார் செய்யப்பட்டது

என்றாலும் சரியல்ல. 4ம் பிரதிவாதி பேரில் ஏற்பட்ட ஆவணமும் போலியான ஆவணங்கற்ள என்பதால்தான். 2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் இவ்வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. கரூர் பைனான்சில் எப்போதுமே கடன் கொடுப்பதற்கு முன்பே ஆவணங்கள் எழுதி வாங்குவது வழக்கம் என்றாலும் அதன்படிதான் வாதியிடமிருந்து அதிகார பத்திரத்தை எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. எனவேதான் அதிகார பத்திரம் எழுதப்பட்ட முத்திரைத்தாள்கள் பல நபர்கள் பெயரில் வெவ்வேறு ஊரைச்சேர்ந்தவர்கள் பெயரில் பத்திர தேதிக்கு முன்னதாகவே வாங்கப்பட்டு தயார் செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றாலும் மேற்படி பத்திரம் அனைத்தும் வாதி கணேசனே வாங்கி வந்தார். அந்த பத்திர தாள்களை வாதி கணேசன் வாங்கச்சொன்னதாக எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்தார் என்றால் நானும் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்த விவரத்தை எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், வாதி கொடுத்த புகாரில் விசாரணையின்போது இனிமேல் சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு எந்த இடைஞ்சலும் செய்ய மாட்டேன் என எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொல்லி விட்டார்கள். அதிகார ஆவணத்திற்கு வாங்கப்பட்ட முத்திரைத்தாள்கள் இல்லை என்றும் பிந்தைய தேதியில் வெவ்வேறு நபர்கள் பேரில் வெவ்வேறு தேதியில் வாங்கப்பட்ட முத்திரை தாள்கள் என்பதால் அந்த அதிகார பத்திரம் சட்டப்படி செல்லத்தக்க பத்திரம் அல்ல என்றால் சரியல்ல. செல்லாத அதிகார ஆவணத்தின் அடிப்படையில் என் பேரில் ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம், கிரைய ரத்து பத்திரம், கிரைய பத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் எனக்கு எந்தவித உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ரத்து பத்திரம்

ஏற்பட்ட தேதியில் எனக்கு பணவசதி இல்லை என சொல்லப்பட்டுள்ள நிலையில் அதே தேதியில் ஏற்பட்ட வாதசாஆ.10 கிரைய பத்திரம் மலரணையாக ஏற்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தை மோசடி செய்வதற்காக பல நபர்கள் பெயரில் கிரைய பத்திரம் உற்பத்தி செய்துள்ளதால் வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எங்களுக்கும் சார்பதிவாளருக்கும் இடையே இருந்த செல்வாக்கை பயன்படுத்தி போலியான பத்திரங்களை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல.

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2023.08.31 17:34:48 +0530

Principal District Judge,
Dindigul.